## ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக் கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிதி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் வரவு, செலவுகள் சமமானதாக இருக்க வேண்டுமாயினும் கல்வி பீடங்கள் மூன்றின் மொத்த வரவு ரூபா 1,801,162 எனினும், வரவை விட செலவு கூடுதலாக காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டின் செலவு கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | இந்த செலவுகள் பாட நெறிகள் ஆரம்பிக்கப்பட நடைபெற்றுள்ளதால், அந்த கணக்குகளின் செலவில் காட்டுவதற்கு காரணமாயிற்று. நிரந்தர அபிவிருத்தி கணக்குகள் எல்லா கல்விசார் பிரிவுகளுக்கும் உரித்தாதனால் 2013 ஆம் ஆண்டின் ஜேனல் குறிப்பு ஒன்றின் மூலம் அந்த கணக்கின் வரவுகள் இருப்பு பொது கணக்குக் மாற்றப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்த கணக்குகளின் செலவுகள் காட்டப்பட்டுள்ளது. | தமது சொந்த பாடநெறி வரவுக் கேற்ப செலவுகள் செய்யப்பட வேண்டுமே தவிர, வரவை விட அதிகமான செலவு கணக்காய்வான அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள படி மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர, அரசாங்க கொடுப்பனவுகள், ஏனைய வரவுகள் மூலம் செய்யப்படக் கூடாது. |
| (ஆ) | சென்ற ஆண்டில் பரிசுகளுக்கான ஒதுக்கீடுகள் 8 க்கு கிடைத்த வட்டி வருமானம் ரூபா 216,821 சென்ற ஆண்டின் கணக்கோடு சேர்க்கப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் ஆதாயமாக காட்டப்பட்டுள்ளது. | 2017 ஆம் ஆண்டின் சேமிப்புக்கேற்ப ரூபா 216,821 ஆன வட்டிப்பணம் 2017 ஆம் ஆண்டின் கணக்குக் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருப்பதோடு அது 2018 ஆம் ஆண்டு கணக்குக்கு உள்வாங்கப்பட்டுள்ளது. | வருடத்தின் ஆதாயம் உண்மைதரவுகளை மட்டுமே கொண்டு காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் கூற்றுக்கள்

| இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் பற்றிய விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக தாபன கோவை 45.2 (XV) மூலம் பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதியை பெறாமல் பல்கலைக்கழகம் மீளாய்வாண்டில் ரூபா 290,214,000 மில்லியனை நிரந்தர இருப்புக்களில் முதலீடு செய்துள்ளன. | கூடுதலான பணம் இருப்பதாக அறிந்து கொண்டதும் அதனை கூடுதல் வட்டி தரக் கூடிய அரச வங்கி ஒன்றில் முதலீடு செய்ய வேண்டும். அனுமதியை பெற்றுக் கொள்ள அதிக நாட்கள் ஆகும். ஆகையால் 290,214,000 மில்லியன் ரூபாவுக்கு தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக சட்ட திட்டங்களுக்கமைய செயல்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைமுறிகளை அறவிடும் போது, சரியான முறையில் கணக்கிடப்படாமையால் 7 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 400,737 மேலதிகமாக அறவிடப்பட்டுள்ளதால் அவ்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பிணைமுறி இருப்பு அந்த தொகையை விட குறைவாக காட்டப்பட்டுள்ளது. | மேலதிகமாக கிடைத்த பிணைமுறி, பெறுமதியால் இரண்டு உத்தியோகத்தர்களது விடயங்கள் 2019 ஆம் ஆண்டு சரியாக்கப்பட்டுள்ளது. மீதி ஐந்து உத்தியோகத்தர்களது விடயமும் 2019 ஆம் ஆண்டு நிவர்த்தி செய்யப்படும். | எல்லா பிணைமுறிகளினதும் இருப்பு பரீசீலனை செய்யப்பட்டு அவற்றை திரும்பப் பெறுவதற்கான வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு முறைப்படி பதிவுகள் வைப்பதற்கான வழி வகைகள் வகுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஓராண்டிற்கு மேற்பட்ட பழமையான ரூபா 1,109,500 ஆன கேள்வி வைப்பு தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2014,2015, மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான மீளப் பெறப்படாத டெண்டர் முதலீடுகள் 2018 ஆம் ஆண்டின் வரவோடு சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஒரு வருடத்துக்கு மேல் பழைமையான டெண்டர் முதலீடுகள் இவ்வருடத்தில் நிவர்த்தி செய்யப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 519,200 நூலக இருப்பு பல்கலைக்கழக வருமானமாக காட்டப்பட்டுள்ளது. | மேற்படி நூலக முதலீடுகள், மறுபடியும் திருப்பிக் கொடுக்க வேண்டிய முதலீடுகள் ஆகையால் இவை பெரும்பாலும் பாடநெறியை நிறைவு செய்யாத மாணவர்களால் கிடைத்துள்ளது. பாட நெறி முடிவடைந்த பின் மேற்படி முதலீடுகள் திருப்பிக் கொடுக்கப்படும். | நிதிக் கட்டளைகள் படி செயல்பட வேண்டும். பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களது முதலீடுகள் ஆதாயத்தில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், திட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ விதிகளுக்கு கட்டுப்படாமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க பிரமாணத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக தாபனக் கோவை 44 (i)(v) பிரிவு | பல்கலைக்கழக முகாமைத்துவக் சபைக்கு 21 பேரை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியமித்திருந்தது. அப்படியாயினும், அந்த பணிந்துரைக் கேற்ப பரிபாலன சேவையை பிரதிநிதித்துவப்படுத்தி அரச நிர்வாக அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு பரிபாலன சேவை உத்தியோகத்தரும் திறை சேரியின் ஒரு உத்தியோகத்தரையும் நியமிக்கக் கூடிய வாய்ப்பு இருந்தாலும் | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கமைய வெளிவாரி உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது பல்கலைக்கழக ஆணைக்குழு மூலம் நியமிக்க வேண்டும். | பல்கலைக்கழகத்துக்கு திறைசேரி உறுப்பினர் ஒருவரை பங்கு பெறச் செய்வதற்கான ஒழுங்குகளை முகாமைத்துவ சபை ஒழுங்கு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அது பற்றி கவனம் செலுத்தப்படவில்லை. | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் கோவையின் XXIV பிரிவு<br>-------------------------------------- | | | |
| (i) 3.7 மற்றும் 3.8 வசனங்கள் | பணிபுரிபவர்களிடமிருந்து கடனின் மாதாந்த கொடுப்பனவுகளை மாதாந்தோறும் பெற்றுக்கொள்ள வேண்டுமாயினும் 2017 ஆம் ஆண்டு டிசம்பரில் மொத்தம் 2,431,720 ரூபா கடன் இருப்பு 22 பேரிடம் இருந்து முறையாகவும் மாதந் தோறும் அறவிடப்படவில்லை. | உத்தியோகத்தர்கள் 8 பேர் பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் பெற்று சென்றதால் 2 பேரின் ஊழியர் சேமநல நிதி செலுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விடயத்தினால் மாதாந்த கொடுப்பனவாக அன்றி முழுத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர்கள் இருவரில் ஒருவர் வேலையில் இருந்து விலகிக் கொண்டதால் அப்பணம் ஊழியர் சேமநல நிதியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க மாதாந்த மற்றும் கிரமமான கடன் தொகைகளை அறவிடும் பணி வகுக்கப்பட வேண்டும். |
| (ii) 3.18 வசனம் | பணிப்பாளர் 4 பேரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 384,870 இடர் கடன் மாதாந்த தொகையை முறைப்படி அறவிடாததுடன் அதற்கான வழிவகைகளும் வகுக்கப்படவில்லை. அது மட்டுமன்றி அவர்களுக்கு சம்பளமற்ற லீவுகள் வழங்கப்பட்டுள்ளன. | தற்போது சம்பளமற்ற லீவு பெற்றுக் கொடுப்பதற்கு முன் குறிப்பிட்ட கடன்களை அறவிட வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் சம்பள இல 3805 க்குரிய உத்தியோகத்தரின் கடன் தொகை 2019.05.29 ஆந் திகதி பல்கலைக்கழகத்துக்கு கிடைத்துள்ளது.<br><br>சம்பள இல. 8061, 7729, 6682 உரி விரிவுரையாளர்களின் சேமலாப நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக மூன்று மாத சம்பளத்தை | சம்பளமற்ற லீவு வழங்கப்படும் போது செலுத்தப்பட வேண்டிய கடன்களை முறையாக பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்ள விருப்பை தெரிவிக்காத காரணத்தால் காலதாமதமாகி உள்ளது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் | | | |
| | நிதிப்பிரமாணம் 757/(2)(அ) | குறிப்பிட்ட ஆண்டின் டிசம்பர் 31 ம் திகதிக்கு பல்கலைக்கழகத்தின் மொத்த பெறுமதி சம்பந்தமான சொத்துக்கள் பற்றிய கணக்கெடுப்பு ஒன்றை நடாத்தி அந்த அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயத்துக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | மேற்படி அறிக்கை தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. | நிதிச்சட்டங்களுக்கமைய உரிய காலத்தில் பொருட்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | (ஈ) பல்கலைக்கழக தாபக்கோவை மற்றும் உயர்கல்வி நிறுவன தாபக்கோவை | | | நிதிச்சட்டங்களுக்கமைய உரிய காலத்தில் பொருட்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | (i) 20 ம் இலக்க சட்டத்தின் 3.1 பிரிவு மற்றும் 10 ம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவிபணியாளர்களின் வரவு திரும்பிச்செல்லல் லீவுகள் பற்றிய தகவல்களை உறுதி செய்யக்கூடிய வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென்று குழுவின் போது கருத்து தெரிவிக்கப்பட்டாலும் அதன்படி செயல்பட்டிருக்கவில்லை. | இது பல்கழைக்கழக அமைப்பிற்கே ஏற்படும் காரணம் என்பதால் இது பற்றிய ஒரு முடிவு எடுக்கப்பட்டு இது விடயத்தில் செயல்பட வேண்டிய முறை பற்றி பல்கலைக்கழக மானியங்கள் குழு மூலம் சகலருக்கும் அறிவுரை வழங்க வேண்டும். | பல்கலைக்கழக சட்டங்களுக்கமையவும் பொது நிர்வாக செயற்குழு பரிந்துரைகளுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | XXVI இலக்கச் சட்டத்தின் 2.1 ஆம் பிரிவு | நிதி ஆண்டின் இறுதி தினத்திற்கு நிறுவனத்தின் சகல பொருட் நிரந்தர ஆதாயங்கள் என்பன அதற்காக நியமதிக்கப்படும் பரிசோதனைக்குழு மூலம் சரி, பிழை பார்க்கப்பட வேண்டுமாயினும் 2015 ஆண்டின் பிறகு பல்கலைக்கழக நூல்நிலைய புத்தகங்கள் பற்றிய பரிசோதனை ஒன்று நடாத்தப்படவில்லை. | பல்கலைக்கழக நூல்நிலைய புத்தகங்கள் பெருந்தொகையில் இருப்பதால் வருடாவருடம் கணக்கிடுதல் சிரமம் என்பதால் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பரிசோதிப்பதற்காக பரிந்துறை வழங்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக சட்டங்களுக்கமையவும் பொது நிர்வாக செயற்குழு பரிந்துரைகளுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும். |
| (உ) | 2002 ம் ஆண்டின் நவம்பர் மாத 28 ஆம் திகதியிடப்பட்ட திறைசேரியின் HAI(எச்.ஏ.அய)/2002/2 இலக்க சுற்றறிக்கை | கணனிகள், கணனிகளின் தொகுதிகள் சம்பந்தமாக சுற்றறிக்கைபடி நிரந்தர இருப்புக்கள் பற்றிய அட்டவனை ஒன்று கொண்டு நடாத்தப்படவில்லை. | தற்போதைய நிரந்தர உடமைகள் பற்றிய விபரம் அட்டவணைக்கு உள்வாங்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபங்களுக்கேற்ப செயல்பட வேண்டும். |
| | (ஊ) 2003 ம் ஆண்டு ஜுன் மாத 2 ம் திகதி PED(பிஈடி)/12ம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06.05.01 வசனம் | வருடாந்த நிதி அறிக்கையோடு திட்டமிடப்பட்ட வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை. அத்தோடு 2016 ம் 2017 ம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழ சட்டதிட்டங்களுக்கு அமைய செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) 2015 ம் ஆண்டு செம்தெம்பர் 18 ம் திகதியிடப்பட்ட 13/2015 ம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் குழுவின் சுற்றறிக்கை | பல்கலைக்கழக பீடாதிபதிகள் 7 பேருக்கும் ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களில் குறிப்பிட்ட ஆண்டின் எரிபொருள் 140 லீட்டர்களை விட மேலதிகமாக ரூபா 757,719 பெறுமதியான 6,272 லீட்டர் எரிபொருள் பாவிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ பீட்டத்தினதும் பொறியியல் பீடத்தினதும் எரிபொருள் அளவை விட கூடுதலாக ரூபா 344,598 பெறுமதியாக 2,624 லீட்டரும் ரூபா 173,556 பெறுமதியான மேலதிக 1,282 லீட்டரும் பாவித்துள்ளார்கள். | தேவைக்கேற்ப முகாமைத்துவ சபை மூலம் மேலதிக எரிபொருள் சுற்றிக்கை படி அனுமதிக்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபங்களுக்கேற்ப செயல்பட வேண்டும். |

## 1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொது பரிபாலன முறை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக சம்பள அறிக்கையை தயாரிக்கும் கணனித் தொகுதியில் ஏற்பட்ட குறையின் காரணமாக மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதத்தில் அந்த கணனிகளின் செயல்பாடு பற்றி, தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றின் மூலம் பரிசோதித்த போது ஒப்புவிப்பு தவறுகள் 26 உம் தகல் தொழில் நுட்ப ஒப்புவிப்பு தவறுகள் 25 உம் கண்டுபிடிக்கப்பட்டன. அதனால் மீளாய்வாண்டின் செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 2,989,043,825 ஆன பணிப்பாளர் உழைப்புத் திறனின் பெறுமதி பற்றி கணக்காய்வில் குறைவற்ற நிலை பற்றி திருப்தி கொள்ள முடியவில்லை. | தனியார் கணக்காய்வு நிறுவனத்தால் பல்கலைக்கழக முகாமைத்துவ, கணக்காய்வு கமிட்டியின் சிபார்சுக்கேற்ப இந்த கணக்காய்வு நடாத்தப்பட்டதுடன் கண்டு கொள்ளப்பட்ட தவறுகள் மறுபடியும் பல்கலைக்கழக முகாமைத்துவத்துடன் ஆலோசனை செய்து, தவறுகளை திருத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன்படி சம்பள கொடுப்பனவுகள் சரியாக செய்யப்பட்டுள்ளன. என்பதை உறுதி செய்கிறேன் சம்பளத்தை கணனி மயப்படுத்தல், பரிசோதித்தல் என்பன கொடுப்பனவுகள் செய்யப்பட மன் அனுமதி பெறப்பட்டு சம்பளங்கள் வழங்கப்பட்டுள்ளன. | ஏற்பட்டுள்ள தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு அந்த தவறுகள் நிவர்த்தி செய்யப்படவோ அல்லது புது கணனி தொகுதி ஒன்றை அறிமுகப்படுத்தவோ வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகள் படி ரூபா 159,969,855 குறைபாடு ஏற்பட்டுள்ளதோடு அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் குறைபாடு ரூபா 224,091,778 ஆகும். அதற்கேற்ப நிதி விளைவு ரூபா 64,121,923 ஆக உயர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி செலவு ரூபா 1,008,282,778 ஆல் கூடியிருந்தாலும், அதற்கேற்ப கூடியிருந்தாலும் அரசாங்க மானியம் ரூபா 815,768,897 ஆகவும் உள்ளக வருமானம் ரூபா 106,875,328 ஆகவும் முறைப்படுத்தல் ரூபா 153,094,571 ஆகவும் கூடியுள்ளமைஇந்த வளர்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு சம்பந்தப்பட்ட முன்னேற்றம் சம்பந்தமான ஆய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படும்.

- பல்கலைக்கழக மொத்த வருமானத்தில் 77% மேற்பட்ட தொகை அரச மானியங்களாக உள்ளதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அரச மானியம் 25 % சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- மீளாய்வாண்டின் தினசரி செலவுகளோடு ஊழியர்களது கொடுப்பனவுகள் ரூபா மில்லியன் 3,031.23 ஆக உள்ளதுடன் சென்ற ஆண்டோடு ஒப்பிடும் போது 22.47 % சதவீத அதிகரிப்பாகும். ரூபா மில்லியன் 3,977.93 ஆன தொடர்ச்சியான மானியங்களில் ரூபா மில்லியன் 3.031.23 அதாவது 76.2% சதவீதம் ஊழியர் கொடுப்பனவுகளுக்கு செலவிடப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக ஏனைய செலவுகளுக்காக ரூபா மில்லியன் 946.7 அதாவது மொத்த அரச தொடர்ச்சியான மானியத்தில் 23.8% வீதம் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

- சென்ற ஆண்டில் ரூபா. மில்லியன் 35.9 ஆக விருந்த பல்கலைக்கழக அன்றாட செலவுகள் மீளாய்வாண்டில் ரூபா மில்லியன் 74.4 வரை கூடியுள்ளது. 107% சதவீத அதிகரிப்பாகும்.

### 2.3 விகித ஆய்வு

#### இலாபகரமான ஆய்வு

மீளாய்வாண்டின் குறைபாடு ரூபா மில்லியன் 159,969,855 உம் முழு வருமானம் 5,649,251,082 உம் இருந்ததால் இலாபகரமான விகிதம் நூற்றுக்கு (2.83) ஆனதுடன் சென்ற வருடத்தில் அந்த விகிதம் நூற்றுக்கு 5.23 வீதமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017/2018 ஆண்டு கற்கை ஆண்டுக்கான பல்கலைக்கழக 5 பீடங்களுக்கான மாணவர்கள் 54 பேர் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட அட்டவணைபடி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள். | வராத மாணவர்களுக்கு பதில் அதற்கு கீழ்உள்ள மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் பிணை முறி செயல்படாமை காரணமாக விரிவுரையாளர்கள் 42 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 119,464,310 நிலுவையில் உள்ளது. அந்த அறவிடப்பட வேண்டிய பிணை முறி நிலுவையில் ரூபா 52,706,308 தொகை பத்து வருடங்களுக்கு குறைவானதாகவும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை 6,785,622 ஆகும். பிணை முறி செயல்படாத வருடத்தை கூட அறிய முடியாத தொகை ரூபா 4,972,380 ஆகும். | 2018.12.31 ம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய பிணைமுறி பெறுமதியான ரூபா 119,063,568 ஆன நிலுவையின் 2019.05.31 ம் திகதிக்கு ரூபா 4,825,279.52 அறவிட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பிணைமுறி அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் இந்த அறவீட்டு முறையை மிகவும் வினைத்திறனுடன் செயல்படுத்துவதற்கான தேவையான யோசனைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | சகல பிணைமுறை நிலுவைகளையும் அறவிட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதேபோல இது போன்ற பிணைமுறை முறுகல்கள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க ஒப்பந்தங்களில் கடினத்தன்மையை எற்படுத்த முகாமைத்துவம் தக்க நடவடிக்கைகள் எடுக்க கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வேறு பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு வருட மாற்று வருடாந்த லீவு பெற்று வரும் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தும் பொது அவர்களது கொடுப்பனவுகளில் இருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி குறைக்கும் போது குறிப்பிட்ட வரி அறவீட்டு முறைமை கையாளப்படாததால் 3 பேரிடமிரந்து கொடுப்பனவுகளில் இருந்து ரூபா 318,850 குறைவாக வரி அறவிடப்பட்டுள்ளது. | குறைத்து அறவிடப்பட்ட உழைக்கும் போது செலுத்தும் வரியை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு திருப்பி ஒப்படைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த லீவுகள் முடிவடைய முன் தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து குறிப்பிட்ட வரியை அறவிட வேண்டும் அத்தோடு ஏனைய பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்களை அவ்வப் பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கொள்கைகளுக்கேற்ப மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு பல்கலைக்கழக நிரந்தர இருப்புக்களின் மொத்தம் ரூபா 11,170,465,273 வெனினும் அதை உறுதிப்படுத்திக் கொள்ள நிரந்தர இருப்பு கணனிமயப்படுத்தல் மூலம் அன்றைய இருப்பை பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் இருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் நிதிக் கொள்கையை தயாரித்த பிறகு கூட கணனி மயப்படுத்தலில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வசதிகள் இருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் நிதிக் கொள்கையை தயாரித்த பிறகு கூட கணனிமயப்படுத்தலில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வசதிகள் இருப்பதை கண்கானிக்க முடிந்தது. | 2018 ஆம் ஆண்டில் பௌதீக பரிசோதனைகள் செய்யப்பட்டு நிரந்தர இருப்புக்கள், சீர் செய்யப்பட்டு வருகின்றன. | நிரந்தர உடமைகள் அட்டவணை பௌதீக செயற்பாடுகளுடன் ஒப்பிடக்கூடிய விதத்தில் கணனி மயப்படுத்தலை மேம்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்ப முதல் 6 வருடங்களுக்குள் திட்டமிடப்பட்ட செலவு ரூபா 420,458,710 பலவிதமான பரிசோதனைகள் 317 க்கு பரிசோதனை மற்றும் வெளியீட்டுகமிட்டியின் அனுமதி விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 27 பரிசோதனை ஆலோசனைகள் கைவிடப்பட்டிருந்த தோடு மீளாய்வாண்டின் இறுதியில் கூட மேற்குறிப்பிட்ட பரிசோதனைகளில் 59 சதவீதமானவை அதாவது 187 பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை அறிக்கைகள் சமாப்பிக்காது பரிசோதனை கைவிடப்பட்டுள்ள விரிவுரையாளர்களிடமிருந்து அப்பணத்தை திரும்ப பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பரிசோதனை கமிட்டி மூலம் இதனை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனை நடவடிக்கைகள் முறையாகவும் பயனுடையதாகவும் அமைவதற்கான கூடுதல் கவனம் செலுத்தி புது பரீசீலனை முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | வைத்திய பீடத்தின் கலாநிதி ஒருவருக்கு முறையே 2012,2013, 2014 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ரூபா 4,313,800 பரிசோதனை 4 க்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும் ஒரு பரிசோதனை நிறைவு பெற முன் மற்றுமொரு பரிசோதனை அனுமதிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு நிறைவு பெறும் போது அதில் ஒரு பரிசோதனை கூட நிறைவு பெற்றிருக்காத நிலையில் கலாநிதி அவர்கள் 2012 ஆம் ஆண்டின் அனுமதித் தொகையில் ரூபா 800,850 உம் 2013 ஆம் ஆண்டில் 7பா 1,575,000 உம் முற்பணமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதில் பொய்யான தகவல்களும் பொய்யான பற்றுச் சீட்டுக்களும் கொடுக்கப்பட்டிருந்தமை காணப்பட்டது. | இறுதி அறிக்கையை கூடிய சீக்கிரம் பரிசோதனை கமிட்டியிடம் ஒப்படைக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதிக் கட்டளைகள், சுற்றறிக்கைகள் என்பனவற்றுக்கு ஏற்ப பரிசோதனைகளுக்கு பணம் செவு செய்யப்பட வேண்டியதுடன் பரிசோதனைகள் பற்றிய மீளாய்வு விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பண வருகைக்கு மேலதிகமாக காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளதால் மீளாய்வாண்டின் ஜனவரி முதல் டிசெம்பர் வரை தினமும் ரூபா 15,706,750 முதல் ரூபா 163,374,592 வரை கணக்கேடுகளில் கடன் மீதி தன்மை ஏற்பட்டுள்ளது. | மீளாய்வாண்டுக்குள் ஜனவரி முதல் டிசெம்பர் வரை தினமும் ரூபா 15,706,750 முதல் 163,374,592 வரை கணக்கேடுகள் கடன் மீதி காட்டப்பட்டாலும் காசோலைகள் வழங்கப்படும் போது வங்கி இருப்பில் குறை இருப்பு நிலை ஏற்படாத முறையில் காசோலைகள் வழங்கப்படுகின்றன. அதே போல் திறைசேரியால் பணம் கிடைக்கும் வரை காசோலைகள் தயாரித்து வைக்கப்படும். | கணக்கேடுகளில் குறை நிலை ஏற்படாத விதத்தில் வரவுக்கேற்ப கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். |

**3.3 நிதியங்களின் குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ பீடத்திற்காக மெத்செவன காணியில் 5 ஏக்கரை சுவீகரிப்பதற்கான 1994 ஜுன் 29 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கேற்ப 1998 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை மூன்று தடவைகளில் ரூபா மில்லியன் 24 ம் மீளாய்வாண்டில் ரூபா மில்லியன் 50 ம் ஆக ரூபா மில்லியன் 74 மேல் மாகாண சபைக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் மேற்படி காணியை பெற்றுக் கொள்வதற்கான வேலைகள் 2019 செப்டம்பர் 30 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | கூடிய கெதியில் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சுடன் பேசி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | உறுதியை பெற்றுக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் துரிதப்படுத்த வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவ குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இரசாயன விஞ்ஞான கூட கட்டத்திலும் புது கலா நிலைய புனர் நிர்மான வேலைகளதும் ஒப்பந்தக்காரர்களால் கைவிடப்பட்டிருந்தால் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதி ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டிருந்த அப்படியானாலும் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த ரூபா 2,268,483 முற்பணத்தில் பூர்த்தி செய்யப்படாத வேலைகளுக்காக திரும்ப பெற வேண்டிய ரூபா 1,764,013 செயற்திட்ட பிணைமுறியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படாததோடு அப் பணத்தை ஒப்பந்தகாரரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த பணத்தை பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை முகாமைத்துவ காலம் நிறைவு பெற முன் பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், இப்பணத்தை உடனடியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2014 ஆம் ஆண்டு ரூபா மில்லியன் 61.5 செலவில் விலை கொடுத்து வாங்கப்பட்ட கொஹுவெல காணியும், கட்டமும் பல்கலைக்கழக தேவைகளுக்கு பொருந்ததால் களனி பல்கலைக்கழக அழகியல் கல்வி நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் இந்த ஒப்படைப்பு, கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பல்கலைக்கழகம் பாவிக்க உடமை ஒன்று மீளாய்வாண்டின் நிதி வெளியீடுகளில் உள்வாங்கப்பட்டிருந்தது. | 2017.03.07 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொது வர்த்தக செயற்குழு கூட்டத்தின் முடிவின் படி உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் இந்த காணியையும் கட்டத்தையும் மீண்டும் திருப்பி ஒப்படைக்க வேண்டும். என்று கேட்டுக்கொள்ளப்பட்டாலும் அழகியற் பல்கலைக்கழகம் அதனை எமது பல்கலைக்கழகத்து திருப்பி ஒப்படைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | முறைப்படி பெற்றுக்கொள்ளல் அல்லது பெற்றுக்கொடுத்தல் மடிவடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க அல்லது அரச சார்பு நிறுவனங்களின் சேவைகளுக்காக சம்பள நிறைவேற்றல் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவுரையாளர் ஒருவருக்கு செருத்தப்பட்ட சம்பளத்தில் உள்வாங்கப்பட்டிருந்த 7பா மில்லியன் 1,437,882 வை கல்வி கொடுப்பனவாக குறிப்பிட்ட நிறுவனத்தால் நிவர்த்தி செய்ய முடியாதென தெரிவிக்கபட்டுள்ளது. அதனால் அப்பணம் குறிப்பிட்ட விரிவுரையாளர்களிடமிருந்து மீளப் பெற வேண்டுமாயினும், அதற்கான சட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் எடுக்கப்படவில்லை. | பாதுகாப்பு செயலாளருக்கு 2019.04.26 ஆந் திகதி இந்த கொடுப்பனவுகள் சம்பந்தமாக கேட்கப்பட்ட தற்கேற்ப 2019.06.21 ஆந் திகதி பதில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது அதற்கேற்ப அப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீளப் பெறல் உடனடியாக நடைபெறல் வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் தொகை 2,506 ஆக இருந்தது. அதிக கல்விசார் ஊழியர் பதவிகள் 249 ம் பரிபாலன பதவி ஒன்றும் ஏனைய கட்டளை நிலை உத்தியோகத்தர் பதவி (ஆறும்) 6 ம் மருத்துவர் பதவி (மூன்றும்) 3 ம் ஆம் கல்விசார் ஊழியர் பதவிகள் 32 ம் வெற்றிடமாக இருந்தன. மேலும் கல்விசாரா பதவி வெற்றிடங்கள் 152 ம் இருந்தன. | பொறியியல், தொழில்நுட்ப பீடங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பீடங்களாதலால் அதற்கான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வெற்றிடங்களும் இதில் அடங்கும் புது பீடங்களுக்கான பதவிகள் அறிவிக்கப்பட்டாலும் அதற்கான சேர்த்துக்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் 2018 ஆம் ஆண்டுக்குள் கிடைக்கவில்லை சில விஷேட பாடநெறிகள் சம்பந்தமாக தகுதியுடைய விரிவுரையாளர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காததால் சேர்த்தக் கொள்ளல் தாமதமாகி | வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளது. பரிபாலன உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழக மானியங்கள் சபையால் நியமிக்கப்படுவார்கள்.<br><br>876 சுற்றறிக்கை படி குறிப்பிட்ட அமைச்சின் மூலம் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் பதவிகள் (தொழில் நுட்ப ஊழியர் போன்ற) சம்பந்தமான பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. | |

## 4. கணக்கீட்டு சுபாவமும், நல்லாட்சியும்

### வரவு, செலவு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்ட 102 பிரிவுக்கு முரணாக நிதி பொறுப்பு கிடைத்ததன் பின் அந்த பெறுமதிகளுக்குகேற்ப வரவு செலவு கணக்கிடப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் 10 சந்தர்ப்பங்களில் வரவு செலவு அறிக்கை திருத்தப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் வெளியிடப்படும் சுற்று நிருபங்களுக்கேற்ப அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை செலுத்தவும் பல்கலைக்கழகத்தால் பின்பு காணப்பட்ட பரஸ்பர கருத்து பரிமாறல் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் தேவையான மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப முதல் வரவு – செலவு அட்டவணை அடிக்கடி மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக மானியங்கள் குழு, திறைசேரி, பல்கலைக்கழக முகாமைத்துவம் என்பன சேர்த்து ஆலோசித்து எடுக்கும் முடிவின் படி ஆண்டின் ஆரம்பத்துக்கு முன்பே வரவு – செலவு கணக்குகளை முறையாக தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழக 2017 ஆம் ஆண்டின் நிலுவை பில் களை செலுத்துவதற்கு தேவையான ரூபா 730,000,000 பணம் மீளாய்வாண்டின் வரவு – செலவு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் நிதித்திட்டங்களை தயாரிக்கும் போது 2018 ஆம் ஆண்டின் செலவுகளை மட்டும் உள்வாங்கியதுடன் ரூபா 730,000,000 வான 2017 ஆம் ஆண்டின் செலுத்தப்பட வேண்டிய பில்களை செலுத்துவதற்கான பணமாகினும் இங்கு உள்வாங்கப்பட்டிருந்தது. பொறியியல் பீடத்தின் கட்டங்களுக்கு செலுத்த வேண்டிய முற்பணமாகும். இதற்கான பணம் | பல்கலைக்கழக மானியங்கள் குழு, திறைசேரி, பல்கலைக்கழக முகாமைத்துவம் என்பன சேர்த்து ஆலோசித்து எடுக்கும் முடிவின் படி ஆண்டின் ஆரம்பத்துக்கு முன்பே வரவு – செலவு கணக்குகளை முறையாக தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் எனினும், குறிப்பிட்ட ஆண்டில் திறைசேரியால் பணம் கிடைக்காததால் 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. | |

## 4.2 முறைமைசார் அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறைமைசார் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் படி எல்லா அரச நிறுவனங்களும் செயல்பட வேண்டியுள்ளதால் மீளாய்வாண்டிற்கு ஏற்ப ஶ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் பாட நெறிக்களுக்கேற்ப எவ்வாறு செயல்பட வேண்டுமென்பது பற்றி போதுமான நோக்குடன் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கேற்க ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழ்ச்சி நிரலுக்கு கேற்ப நிறுவனத்தின் செயல்கள் சம்பந்தமான முறைசார் அபிவிருத்தி நோக்கங்கள், நோக்கு மற்றும் அந்த நோக்குகைள சென்றடைய உள்ள தடைகள் இலக்குகளை அளவிடுதல் சம்பந்தமாகவும் நிறுவனத்தால் புரிந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | மேற்படி நோக்குகள் உணர்த்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும். | மேற்படி நோக்குகளை இனங்காணுதல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |